# ஆதி மார்க்க னீதி மொழி

**April 2026**

*இதழ் 57 – ஏப்ரல் மாதம் 2026 வெளியீடு*

*© AMNA Trust, Chennai*



### மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

### பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

### மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே! எதார்த்த நன்மன சற்சன மக்களே ! பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி அவையின் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை 57வது வெளியீடாக 13 அவை மற்றும் ஒரு இசை வகுப்பு நிகழ்வுடன் மலர்ந்து மெய் மணம் கமழ்கிறது.

அறிவு சார்ந்த அத்தனை விஷயங்களும் ஒன்றாக வைத்து பேசப் பெற்றுள்ள இதனை மிக நெருக்கமாகவும் பெருக்கமாகவும் நின்று பார்க்கின்ற மக்களே அறிவர். கால காலங்களாக பெரியோர்கள் தங்களின் திருக்கரத்தில் தாங்கி வந்த மெய்ப்பொருள் ரகசியத்தை சுமந்து வரும் இச் சஞ்சிகையை என் மக்கள் எல்லோரும் பார்த்துப் படித்துப் பயன் பெறவே ஒவ்வொரு மாதமும் இது வெளியிடப்பெறுகிறது.

கைம்மாறு செய்ய இயலாத இதற்கான செயலை சிரம்மேல் தாங்கி செயலாற்றும் என் மக்கள் யாவர்க்கும் எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வம் திருவடிப் பேறும் நல் ஆசீர் பாதங்களும் வழங்க வேண்டி அப்பெருமானின் திருவடி போற்றி வணங்குகிறேன். அவையின் நிகழ்வுகளை நேர்முகத்தில் கேட்டு ரசித்த மக்களும் வருங்கால மக்களும் இதனை அறிய வேண்டி சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதே இம் மின்னணு சஞ்சிகையின் நோக்கம்.

மூல மந்திரம் பாத பூஜை மகா சங்கல்ப மந்திரம் இவற்றின் செயல்கள் என்ன? அவற்றை குறிப்பிட்ட நேரத்தில் சொல்ல வேண்டியதன் அவசியம் என்ன? என அப் பெருமான் அருளிய செயலுள்ள திரு வார்த்தை யாவும் கண் நேர் சாட்சியாக செயலாகக் கொண்டதுவே ஆதி மார்க்க னீதி அவை. சாலை ஆண்டவர்கள் கொண்டு வந்த சத்திய மெய்ச் செயல் கிஞ்ஞித்தும் மாற்றம் இன்றி நடைபெறும் இவ் அவையின் நிகழ்வுகளை சந்தேக நோக்குடன் உளவறிய வருவோரும் கூட இதன் உண்மையை உணர்ந்து இதனைத் தொடர்வதும் நிதர்சனமான உண்மை. கால காலங்களாக பெரியோர்கள் தங்கள் திருக்கரத்தில் தாங்கி வந்த பாரமார்த்திக ஞானம் இது.

மனு முளை துவங்கிய காலம் முதலாக வந்த இந்த மெய் என்றென்றும் மெய்யாகவே இருக்க வேண்டும் என்ற அடி நாதத்தைத் தாங்கி வரும் இந்த சஞ்சிகை சாதாரண வார்த்தை அல்லது பிரசங்கம் போலன்றி பிறவா நெறியை அடி நாதமாகக் கொண்டு பிறவிப் பிணி தீர்க்கும் மாமருந்தின் செயல்கள் பொதிந்து வருவதாகும். பிறவி நோய் தீர்க்கும் ஒரே மருந்தாகிய நாத மருந்தை



Copyright © AMNA Trust, Chennai

**உட்கொள்ள வேண்டிய ஒரே ஒரு காரணத்தின் அவசியத்தை உணர்த்தும் செயல் தாங்கியே இது பிரதி மாதமும் இடையறாது மலர்ந்து மணம் கமழ்கிறது.**

**முழங்கும் எனது முத்திப் பேருரையைக் கேட்டும் இதனைப் பார்த்தும் படித்தும் தொடரும் எதார்த்த நன்மன மக்கள் யாவரும் பயன் பெற வேண்டும் என எல்லாம் வல்ல பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.**

**நமஸ்காரம்.**

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

***சூத்திரன்*** *: மெய்ஞ்ஞான இச்சையே இல்லாதவன்.*
***வைசியன்*** *: மெய்ஞ்ஞான இச்சையுடையவனாய் ஒரு சற்குருபிரானின் சன்னிதியைத் தேடி அடைந்நவன். (திரைகடல் ஓடியும் திரவியம் தேடுதல் என்பது இதையே).*
***க்ஷத்திரியன்*** *: அந்நச் சன்னிதியில் ஞானபதத்தை அடைய வைராக்கிய முடையவனாய் னிற்பவன்.*
***பிராம்மணன்*** *: அவ்வாறு னிற்கும் அவனது வைராக்கியத்தைக் கண்டு ஆசான் கனிந்து அருள்பாலிக்க, பிரம்மோபதேசம் பெற்றவன்.*

***உன்னைப் படைத்தது இந்நிரியம். அது வெளியாகிப் பறிக்கப்பட்டு இறந்நால், செத்தான் என்று சொல்லவேண்டும். அப்படி அது வெளியாகாமல் பிரயாணமானால், உள்ளேதானிருக்கிறான்; சாகவேயில்லை என்றாகிறது. அவரைத்தான் அடக்கம், ஆனவர் என்று சொல்லவேண்டும். அவர் சுவர்க்கலோக வித்தாக ஆகிறார். சாவாவரம் பெறல் என்பது இதுவே.***

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2026 மார்ச் மாதம் அவை நிகழ்வுகள் – 2026 ஏப்ரல் மாதம் வெளியீடு

### 01-03-2026 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சரவண நந்தவனம்
### மெய் ஆலயம் திறப்பு விழா சிறப்பு அவை
### தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **வாஞ்ஞாலிப் பழம்புலமை மன்னரொரு...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**




சிவசிகரக் குரசலங்னிர்தப் பிழம்பென்னும் அதி மகோன்னத னிலையைப் பெற்றவரே இறை குரு. சிவ செங்கோல் ஏந்தி வந்து, ஒருருளைத் தேவ ரதத்தில் நம்மை ஏற்றி, சாலைத் தமிழின் மூலம் எமபடர் அச்சமென்னும் இருட்பிடிப்பை நம் உள்ளத்திலிருந்து அகற்றுகிறார்கள். மனிதனை சன்மார்க்க செயலில் ஆக்கி, பரமபத நித்திய முத்தி வீட்டில் சேர்ப்பது ஒன்றே, பொன் அறம் பிறந்த பீட பூமியாக ஸ்தாபிக்கப் பெற்றிருக்கும் இம் மெய் ஆலயத்தின் ஒரே நோக்கமாகும்.

*ஜீவ சகோதரர் சங்கர் :*

நம் வினை தீரும் தருணமே ஓர் எதார்த்த தேவகுருவின் தரிசனை கிட்டுகிறது. அவர்களின் பெருங்கருணை மூலமே நம் தூல வாசனை அற்று, ஜீவ வாழ்வில் குடியேறி பேரின்பத்தை அனுபவிக்க முடியும். சர்வ மதங்கள் மற்றும் மூல மந்திரத்தின் அடிநாதமாகிய மறலி கை தீண்டாமை என்பதை குருபிரான் அருளும் மெய் உணர்வின் மூலமே பெற முடியும்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :*

சற்குருபிரானிடம் தஞ்சம் அடைவது ஒன்றே பிறவாமைக்கான வழியாகும். தவத்திரு மேனியரின் தில்லை அமுதமாகிய நாதத்தை, யோக உணவாக உட்கொண்ட பின் நம் மனம் செம்மையாகிறது. மெய்யறிவு நற்றாளை நம் மீது தரிசனையாக ஏற்றி வைப்பவரே எழுதா மறையாகிய ஆசான்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவ சகோதரர் மணிவண்ணன் :*

நம் அனித்திய தேகம் வளர அறுசுவை உணவு உண்பது போல், சூக்கும தேகத்தில் குடியேறி வாழ ஆசானின் அருளமுத உணவு உட்கொள்ள வேண்டும். அறிவாகார ரூபகராக வந்த குருபிரான், நரனாக இருந்த நம்மை மனுவாக்கி தேவனாக்கி நீதி எனும் பிடரிக்கண் திறப்பித்து மெய்ச்செயலை உணர்த்தி மரணமிலாப் பெருவாழ்வு அளிக்கிறார்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 05-03-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பேசரும் பெரும் பொருளைப் பேசரும் வாசகங் நொண்டு...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவ சகோதரர் சங்கர்:*

பேசரும் பெரும் பொருளாகிய ஜீவன் ஒவ்வொரு மனுத் தலையிலும் கோடி சூர்யப் பிரகாசமாக ஒளி வீசுகிறது. மானிடச் சட்டை தாங்கி வரும் குரு பெருமானின் பேசரும் வாசகத்தின் மூலம் மாசு எனும் குற்றமாகிய நம் வயது வாழ்நாள் மீட்கப் பெறுகிறது. தொன்மறைகளில் பூட்டிய தேவ ரகசியங்களை திறந்து காட்டி, சூக்கும தேகத்தை விளங்கச் செய்பவரே சிரஞ்சீவி.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - வாக்கியம் எண் : 11** போலிப் பெரிய மனுஷன்களின் சாயம் வெளுக்க வரும் முரடன் தான் எமன்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :*

பிறந்தது இனி இறவாத பேசும் பஞ்சாட்சரமாகிய பெரியோர்களின் திருவாய் மொழிகள் நித்திய செயலுடையது. அமானிதம் சுமந்து மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தன்னையறிதல் எனும் கடமையை தேகம் உள்ள போதே நிறைவேற்ற வேண்டும் என சர்வ வேதங்களும் கூறுகிறது. **அரிது அரிது மானிடர் ஆதல் அரிது** என ஔவை பிராட்டியும் அருள்கிறார்கள். ஐவழி விளைவின் அப்பாலாகிய செய்வழி காட்டி உய்வழி கூட்டும் மெய்வழியே இன்று ஆதி மார்க்க னீதி அவை என்ற நாமத்தில் ஏறிச் செயலுடன் விளங்குகிறது.

*ஜீவ சகோதரர் வடிவேலன்:*

மனுவின் தலையில் எமன் ஓலையாக எழுதப் பெற்றிருக்கும் சீட்டின் பெயரே விதி எழுத்து. மெய்க்குருபிரானின் பெருந்தயவால் நம் தலை விதி எழுத்து துடைக்கப் பெற்று மதி எழுத்து பதிக்கப் பெறுகிறது. காலக் கிரகங்களின் பிடியில் பரிதவிக்கும் மக்களை மீட்டுச் சாவா வரச் சீட்டின் மூலம் பிறவாமை அருள்பவரே புருஷோத்தமர். அவரின் பெருங்கருணை பேரிரக்கமே எமன் ஓலையை கிழித்தெறிந்து காலாதீத எல்லையில் குடியேற்றி மகிழ்ச்சிகரமான பேரின்பப் பெருவாழ்வு அருள்கிறது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 07-03-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வேதமணிப் பீடமெனு னாதனெனும்...** ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
ஆதியில் இருந்த வார்த்தை தேவனிடத்திலும் அதுவே தேவனாகவும் இருந்தது. அதுவே அமானிதப் பொருள் இன்னதென மனுவை அறியச் செய்து தேவனாக்குகிறது. அருள் வரதராம் குருநாதரின் அமுதம் சிந்தும் தமிழே, முறையான வணக்கம், மாசற்ற இரக்கம், வருங்கால தீர்க்கம் எனும் மந்திர ஸ்திரத்தை மனுவின் தலையில் செயலாக்கி வைக்கிறது.

*ஜீவசகோதரர் கௌதம்:* ஜகத்குருவாக வருபவரே சாகாக் கலையின் மூலம் இறப்பை னோக்கிச் சென்று கொண்டிருக்கும் மனித வாழ்வை மடை மாற்றி, இறவாமைக்கு அழைத்து செல்கிறார். மலர்மிசை ஏகி மாணடி சேர்ந்தவர் நீங்கா நிலத்தில் நீடூழி வாழ்வது நிச்சயம். தன் எனும் ஜீவ குகைக்குள் அறிவு வடிவாக நின்றிலங்கும் இறைவனை அறிவதே தன்னையறிதல்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 230 (தொடர்ச்சி)** எமனை மிதித்து ஏறும் வல்லபம் பெற்று நித்திய வாழ்வு பெறவே மனிதன் படைக்கப் பெற்றான். எதார்த்த தேவ குருவின் பெருங் கருணையால் மெய்க் கல்வி கற்று, காலம் கடந்த பொருளைக் கைக்கொள்வதே பேரறிவாகும். எல்லாச் சீரும் சிறப்புகளும் தருகின்ற உயிரை, அறிவுக் கண் கொண்டு அகமுகமாகக் காண்பதே தரிசனை.

*ஜீவசகோதரர் கோபிநாத்:* தற்காலத்தில் செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence) பல துறைகளில் ஊடுருவி வருவதால், வேலை வாய்ப்புகளை இழக்க வேண்டிய சூழ்நிலை மனிதனுக்கு உண்டாகிறது. தரவு மையம் (Data centre) உருவாக்க பல ஏக்கர் நிலமும், அளவற்ற மின்சாரமும் தேவைப் படுவதால் இயற்கை சூழல் பாதிப்படைகிறது. அத்துடன் மனிதனின் நினைவில் ஏற்படும் களங்கத்தால் சைபர் குற்றங்களும் அதிகரிக்கிறது. இத்தகைய ஆபத்துகளில் இருந்து நாம் மீள மிகுந்த விழிப்பு உணர்வுடன் வாழ்வது அவசியம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* மனம் பூரித்தால் பாவமும், அறிவு பூரித்தால் புண்ணியமும் கைவரவாகும் என்பது சாலை ஆண்டவர்கள் திருவாக்கு. பெரியோர்களின் கையகத்தான மக்கள் அனைவரும் மெய்ச்செயலில் இணக்கத்துடனும், ஒழுக்கமுடனும் பத்தியத்துடனும் வாழ்ந்தால், வரமான சொர்க்கபதி வாய்க்கும் என்பது சத்தியமே.
பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 08-03-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

வள்ளல் பெருமான் அருளிய **அப்பன் என்னுடை அன்னை தேசிகன்...** எனும் திருப்பாடலுடன் அவை இனிதே உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:** மனுவுக்குள் ஜீவேசப் பொருளாக நின்றிலங்கும் திருச்சிற்றம்பலப் பொருளை அறிவதே ஆன்மீகம். சம்வத்சரம் எனும் பாகை சுழற்சியில் 60 ஆண்டுகளாகக் கணக்கிடப்படும் காலச்சக்கரமானது கணப் பொழுதிலிருந்து துவங்கி, நிமிடம், மணி, நாள், மாதம்,ஆண்டு என விரிந்து யுகங்களாக நீடிக்கிறது. முக்காலம் உணர்ந்த முழு முதல் ஞானிகளின் தயவால் காலத்தின் இரகசியம் அறிந்து, காலம் கடந்த எல்லையில் குடியேறி வாழ்வதே மெய்ஞ்ஞான வாழ்வாகும்.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவ சகோதரி விஜயலஷ்மி:* சதுர்யுகம் என்பது நான்கு வேதங்களாகவும், நாற் பாதங்களாகவும், நாலு தேக ரகசியமாகவும் உள்ளது. யுகங்கள் நான்கும் கைக் கொண்ட கோடூழியராக வரும் குருபிரானின் அருள் நம் மீது படிந்தால் சதுர்யுகங்களும் கண்ட மெய்ம்மையை அறிந்து அழியாப் பதியில் குடியேறலாம்.

*ஜீவ சகோதரி சஹானா:* மகாபாரதத்தின் கதைக் களமும், கதா பாத்திரங்களும் மனிதனின் அகமிய மெய்ச் செயலை உணர்த்தும் சூட்சுமங்களாகும். நம் மனதிற்கும் அறிவுக்கும் இடையே நிகழும் சம்வாதமே குருஷேத்திரப் போர். ஆசான் அருளும் மெய்ஞ்ஞான நிலைகளை அறிந்து தெளிந்த அறிவுடன் வாழ்வதே இம் மனிதப்பிறவி பெற்றதன் பெரும் பலனாகும்.

*ஜீவ சகோதரி கோமதி:* **சுருதி மாதா, லயம் பிதா** எனும் இசை மொழியானது மூச்சு லயமாகிய மனோலயத்தை உணர்த்தும் பரிபாஷையாகும். சீரான கால இடைவெளியுடன் தாளமும், குறிப்பிட்ட ஸ்வரங்களின் சேர்க்கையான ராகமும் இணைந்து பாடலின் அழகை முழுமைப் படுத்துவது போலவே, ஆசானின் இசை நாதத்தைக் கேட்டு காலத்தின் உன்னதம் அறிந்து வாழ்ந்தால் நம் வாழ்வும் முழுமையடையும்.

*ஜீவ சகோதரர் தேவானந்த்:* மாயத் திரைகள் அனைத்தும் விலகி ஞான பாதையில் மெய்யறிவு பெற ஆசான் திருவடியில் சரணாகதி அடைவது ஒன்றே வழியாகும். எண்ணம் பல கோடியாய் விரியாமல் ஒரு முகமாகும் செயலே பிரம்மவித்தை. ஜீவ தேகத்தின் ரகசியம் அறிந்து, வேத வழிப் படி வாழ்ந்தால் ஆன்மீக வாழ்க்கை மிக எளிதாகவும் ஆனந்தமாகவும் திகழும்.

*ஜீவ சகோதரர் வாசுதேவன்:* **தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி** என்பது, நம் உள்ளார்ந்த மனத் தெளிவையும் ஆன்ம விழிப்பையும் தூண்டும் திருவசனமாகும். திசையிலாத் தவத்து ஜீவ முத்தராக வரும் குரு பெருமான் அருளால் நாற் திசைகளின் உண்மையை உணர்ந்தவர்க்கே இத்தேவ பாஷைகளின் மெய்ம்மை துலக்கமாகும் என்ற பகிர்வுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.

## 12-03-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **கற்பனைக எத்துணைக டந்துளவி பொய்யை...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**

தீர்க்க தரிசனம் என்பது திருச்சிற்றம்பலப் பொருளாகிய ஜீவனின் அருங்காரணச் செயல் பற்றி அருள்வதாகும். தீர்க்க தரிசனம் நிரூபணமாகும் எல்லை ஒவ்வொரு மனுத் தலைக்குள்ளும் இருக்கிறது. இதை அறிவதே தன்னையறிதல். நம் எண்ணம் பல கோடியாய் விரிந்து மனமாக செயல்படும் போது அனேகனாகவும், ஓதாமல் ஓதும் செயலால் ஓரறிவாய் நிற்கும் போது ஏகனாகவும் உள்ளது என்பதை மெய்வணக்கத்தின் மூலம் உணரலாம்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் திருவாக்கியம் எண் : 12**

தன் உரிமைப் பொருளாகிய ஜீவாத்மாவை ரட்சிப்பதே பரமாத்மாவின் கடமை. களிம்புடலாம் அனித்திய தேகத்தின் மீது நாம் வைக்கும் இச்சையே கவலை, பிணி, பயத்தின் காரணம். ஆசானின் னாதமே துக்க உடலை நீக்கி, சுக உடலைக் காட்டி எமன் அச்சமற்ற நித்திய தேகத்தில் குடியேற்றுகிறது.



Copyright © AMNA Trust, Chennai 

**காமீல்கள் னோக்கம்** - *ஜீவசகோதரர் கௌதம் :* பேரின்பம் பொதிந்திருக்கும் தெய்வப் பதியாகிய திருவெனும் இமையா னாட்டில் நம்மை வாழ வைப்பதே காமீல்கள் னோக்கமாகும். குருபிரான் திரு ஆலவாய் திறந்து காட்டி, வஞ்சப் புலன் சதியாகிய அனீதத்திலிருந்து நம்மை மீட்டு ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவாகிய னீதத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள்.

**குருபிரான் அருளமுதம் :**

அறுபத்து நான்கு கலைகளுக்கும் மேம்பட்ட ஓர் கலையை உருமுரசறைந்து உலகிற்கு உணர்த்துபவரே உத்தம புருஷராகிய குருபிரான். மின்னல் கிரணமாகிய ஜீவதேகத்தைக் காட்டி, வெண் பிறையாம் அறிவிருக்கும் தலத்தில் குடியேற்றும் நாளே ஞான நாளாகும். அறவாழி அந்தணராம் குருநாதர் அருண்மணித் திறவுகோல் கொண்டு நமக்கு மறுபிறப்பு அளித்து கர்மேந்திரியங்களை ஞானேந்திரியங்களாக மாற்றி வைக்கிறார்கள். மெய்ப்பால் அறிவதற்காக இறைவனால் அருளப் பெற்ற வயது வாழ்நாளை வீணாக்காமல் பாதுகாக்கும் செயலே அறம். அறவாழி அந்தணரின் அருட்கருணையால் அறச்செயல் பழகினால் அழியா மோட்ச சாம்ராஜ்யம் நம் கைவசமாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.

## 14-03-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **எந்நை சுக்கிலாம் பரனாட்டில்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது .

**குருபிரான் அருளமுதம்:**

மானிடப் பிறப்பானது பல துக்க சாகரத் துயரம் கடந்து பிழைத்து வரும் விதத்தை அருள்வதே மாணிக்கவாசகப் பிரான் அருளிய போற்றித் திரு அகவல். தன்னை அறிதல் எனும் கடமையை நிறைவேற்ற, தரப் பெற்றதே அரிதிலும் அரிதாகிய மனிதப் பிறப்பு. வினைத் தொடரால் நம்மை பிடித்து சீரழித்துக் கொண்டிருக்கும் நவக்கிரகக் கோள்களின் தாக்கத்தை தவிடு பொடியாக்கி நிக்கிரக நிலையில் ஆக்கி வைப்பவரே கிரகஸ்தனாகிய குருபிரான்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் - 231:**

நித்தியத்திற்கு என வந்த மனு, அதை அறியாமல் எமன் கைவசப்பட்டு அனித்திய வாழ்வு வாழ்கிறான். இப் பாரத பூமியிலேயே அறிவு கீழாகப் போய்விட்டது எனில் மூக்கறிவு அற்ற மேல் நாட்டாரிடம் அறிவற்ற ஆணவமே மேலோங்கி நிற்கும். தெய்வ எல்லையில் அறிவற்ற அலட்சிய நோக்குடன் இருக்கும் செயலை விட்டு குரு அருளும் நுணுக்கத்தில் நுணுக்கமாக நுழைவதே அறிவாகும்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:*

**வேதாகமம் – ரோமன் 8:8** மாமிசமாகிய அழி தேகத்தைப் பற்றிய சிந்தனையில் இருப்பதே மரணம். மா அம்சம் பொருந்திய அழியா தேகத்தில் சிந்தை வைத்து வாழ்வதே மரணமிலாப் பெருவாழ்வாகும். காருண்யப் பிரானின் கையகத்தில் ஆகி ஏழாம் பிறப்புடலம் பெறுவதே, னித்திய ஜீவனும் சமாதானமும் நிறைந்த மெய்ப் பாதையில் வாழ வழி வகுக்கும்.

*ஜீவசகோதரர் கௌதம் :*

அறிவாகார சொரூபரின் தயவால் ஞானச் செல்வத்தைப் பெற்று வாழ்வதே நித்திய சுகம். மனுவுக்குள் பத்து வயதுக் கன்னியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அறிவுச் சுடரைத் தரிசிக்க வைப்பவரே அருட்குரு. ஆசானின் நாத வல்லபமே எல்லையில்லா ஆனந்தம் அளித்து அழியாப் பதியில் நம்மைக் குடியேற்றும்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவசகோதரர் சங்கர் :*
மனிதனின் எண்ணத்தின் பிற்புறப் பிடரியில் னிறை னீதி ஆசனமிட்டிருக்கும் வஸ்துவித்தின் சூட்சுமத்தை தன்னுள் அறிந்து அடைவதே மெய்ஞ்ஞானம். மறைந்துளன் மாமணி ஜோதியாகிய இறை பொருளை, மெய்க்குருவின் மூலம் தன்னுள் அறிந்தவரே ஜீவாத்மா. சர்வ படைப்புகளையும் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் பராபரத்தின் பெருநிலை வைப்பை அருள்பவரே பரமாத்ம சொரூபராகிய குருபிரான்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 15-03-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தாகம் தீர்த்த தனிப்பெருங் ஙடலே…** எனும் குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவசகோதரர் ராஜேந்திரன்:* குருபிரானின் அன்புக்கு சற்பாத்திரனாக வாழும் போதே ஜீவாத்மா, பரமாத்மாவின் பெரு நிலையை அடைய முடியும். இறைவனை அறிவதற்கான ஆறாவது அறிவு மனிதனுக்கு மட்டுமே தரப் பெற்றுள்ளது. எழுதா மறையாகிய ஆசானின் அருள் மூலம் ஓதாமல் ஓதும் செயல் பழகி அழியாப் பதியை அடையலாம்.

*ஜீவசகோதரர் தேவன்:* மெய்க் குருபிரானின் திருநாவினின்று பொழியும் அமுத மழையே யோக உணவாகும். பஞ்ஞு பூத கணத் தலையரசராக இலங்கும் இறைவனே மனித உருவெடுத்து குருபிரானாக இப்பூவுலகில் அவதரிக்கிறார்கள். அவர்களே பொய்யுலக வாழ்வில் உழன்று கொண்டிருக்கும் நம்மை மீட்டு, மெய்ஞ்ஞானப் பாதையில் வழி நடத்துகிறார்கள்.

*ஜீவசகோதரி கலைவாணி:* புற உலகில் நாம் காணும் பல கடவுள் தோற்றங்கள் யாவும் ஒரே கடவுள் தான் என நம் அறிவு சம்மதிக்க அருள்பவரே மெய்க்குரு. மனுவின் கடத்துக்கு உள் இருக்கும் ஒரு பொருளாம் உறு பொருளே கடவுள் என்ற நாமத்தில் அழைக்கப் பெறுகிறது. சிவன் எனும் வாடாத தீபமாக நமக்குள் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இறைபொருளை உணர்த்தவே ஆலயங்களும் ஆகம விதிகளும் பெரியோர்கள் உண்டாக்கினர்.

*ஜீவசகோதரர் புகழேந்தி:* மனிதனின் அந்தகரணம் நான்கும், 96 தத்துவங்களும், முக்குணங்களும் இறைவனால் படைக்கப் பெற்றுள்ளது. மெய்க்குரு பிரானின் வாய்மைத் துலக்கத்தால் மனம் அறிவாக மாறும்போது சர்வ படைப்பின் இரகசியங்களும் விடியலாகும்.

*ஜீவசகோதரி ஜெயலஷ்மி:* அணுவுக்கு அணுவாகவும், அண்ட பிரம்மாண்டமாகவும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளை தன்னுள் அறிவதே அறிவு. அழி உலக வாழ்வின் மீது வைக்கும் பற்றானது நம்மை அறியாமையில் ஆழ்த்தும். பற்றற்றானாக விளங்கும் இறை குருவின் அன்பகத்தில் நிலைத்து வாழ்வதே அசலான பற்றாகும்.

**குருபிரான் அருளமுதம்:**
**ஜீவனைப் பிரகாசிக்கச் செய்யும் மெய்யான ஒளி நானே** என சத்திய வேதம் கூறும் மெய்ச் செயலை உணர்ந்த மக்களாகவும், நித்திய சுகத்தை அறிந்து ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் பெறும் மக்களாகவும் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கத்தினர்கள் வாழ்கிறார்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 19-03-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **பொன்னில மாத ராசை பொருந்நினர் ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**
மனுவின் உள்ளத்தில் விளைந்து விளைவேறி வருகின்ற அறிவின் இரகசியமே வளர்பிறை. இருதயத்துள் ஐந்து விதக் கலப்பாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் இறை பொருளைத் தரிசித்தவரே மெய்ம்மைத் துலக்கம் பெறுவர். பேராண்மை உடைய பாரவான்களின் பெருந் தயவு கொண்டே வேத வேதாந்தங்கள் இப் பூவுலகிற்கு அருளப் பெறுகிறது.

**கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் 13 :**
தேவ தேவேசன் முதலாய அழியா வரத்து அண்ணல் அனைவரும் அளவிலாக் காலம் அழியாப் புகழ் புகழும் அப்புகழுக்கு பிறந்தவனே மனிதன். உலகை உய்விக்க வரும் அருளாளர்கள் யாவரும் அரும் பாடுபட்டே மெய்ஞ்ஞான பீடத்தை நிறுவுகிறார்கள்.

**குரு ஸ்தோத்திரம் - குருபிரான் அருளமுதம் :**

தாய், தந்தை, குரு, தெய்வம் என நான்கு நிலையும் ஒரே திருமேனியாக உருத் தாங்கி வந்து ஞானச் செல்வத்தை அருளும் இரகசியமே குரு ஸ்தோத்திரம். அதிகாரண கர்த்தரின் வீரம் மலிந்த வெற்றித் தமிழால் போதிக்கப் பெறும் ஞான நிலைகள் யாவும், நம் உள்ளமாகிய மகா மகசூக்கான இருதயத்துள் மெய் உணர்வாகத் தூண்டப் பெறுகிறது. காலத்தை வெல்லக் கூடிய தேவத் திருச்செயலை வைத்தே சாதிகளும், சமயங்களும் உண்டாக்கப் பெற்றது. கயிலாயப் பரம்பரையாய் வானோங்கும் புகழுடன் வாழ வந்த திருக்கூட்டத்தினரே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். நீதியராகிய குருபிரான் ஆசீர்பாத எல்லையில் நின்று அருளும் மெய்ச் செயலைப் பெற்றவர் யாவரும் அழியா நிலத்தாள்கையில் நீடூழி வாழ்வர்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 21-03-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அறங்ங ளொருங்ங்கு திரண்டொரு வீடு ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**ரமலான் சிறப்பு - குருபிரான் அருளமுதம்:**

பிறை சூடி வரும் காமீல் நாயகமாகிய குருபெருமானின் அருட்கொடையால் அறிவுத் தெளிவு பெறும் திருநாளே ரமலான். அல்குரான் வேதமானது முஹம்மது நபியவர்களுக்கு வஹி மூலமாக ரமலான் மாதத்தில் அருளப் பெற்றது. உலக மக்களை உய்விப்பான் வேண்டி, தீர்க்க தரிசியர்கள் திருஅவதாரம் தாங்கி வந்து, மதங்களையும் அதற்குரிய வேதங்களையும் வான நாட்டிலிருந்து இறக்கி அருள்கிறார்கள்.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவ சகோதரர் கௌதம்:* **புனரபி ஜனனம் புனரபி மரணம்** எனும் பிறவிச் சுழலிலிருந்து நாம் மீள்வதற்கான அறச் செயலைப் பழக்கி வைப்பவரே அறவாழி அந்தணர். இந்திர ஜாலத்தால் இம்மனித உருவெடுத்து வந்ததின் ஒரே நோக்கம் பிறவாமையே. வாய்திறந்து ஆலங்காட்டும் வடிவுடை மாயனாம் ஆசானின் வாய்மைக்குள் ஆன மக்களின் தலைவிதி எழுத்தானது துடைக்கப் பெற்று மதி எழுத்து பதிப்பிக்கப் பெறுகிறது. சிரத்தில் ஜீவிக்கும் வேகா சீர்பாதக் கமலமாகிய நற்றாளை நிஜ ரூப தரிசனையாக்கி வைக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் வாக்கியம் எண் : 231 (தொடர்ச்சி) :** ஞானச் செயலை ஈனத்திலும், ஈனச் செயலை ஞானத்திலும் வைத்தால் தீங்கே வரும். கோணாது முக்கோண சக்கரத்தின் மீது குரு சொன்ன ஆசனமிட்டு அமர்ந்து அஷ்டாங்க யோகம் பழகும் செயலே சன்மார்க்கம். ஐந்தொழிலுக்கு அரசராகிய ஆசானின் நாத வல்லபமானது புழுத்தலையனாக இருந்த நம்மை வைரத் தலையாக மாற்றுகிறது. சுகம் நல்கும் வைத்திய னாத மருந்தின் மூலம் ஜீவன் கண்டு ஜென்ம சாபல்ய குலமாக வாழ வைப்பவரே வரத குரு.

*ஜீவ சகோதரர் கோபிநாத் : கை பேசியை கவனமாக உபயோகிக்கும் முறை:* சமூக ஊடக அடிமைத் தனத்தால் (Digital addiction) நம் காலமானது விரயமாகி, அன்றாடப் பணிகள் தாமதமாகி, தடுமாறச் செய்கிறது. கால வரையறை இன்றி பொழுது போக்கிற்காக கைபேசியை பயன்படுத்துவதால் கண் பார்வை, கேட்கும் திறன், பேச்சாற்றல், கழுத்தில் பாதிப்பு, கவனச் சிதறல், தூக்கமின்மை, மனச்சோர்வு, மறதி, மன அழுத்தம் என பலவிதமாக உண்டாகும் பிரச்சனைகள் யாவற்றையும் மனக் கட்டுப்பாட்டின் மூலமே தீர்க்க முடியும்.

*ஜீவ சகோதரர் குமார்:* **சத்திய வேதாகமம் - ரோமர் அதிகாரம் 8 : 9**

உலக இரட்சகராம் கிறிஸ்துவாகிய குருபிரானே நம்மை பாவப் பிடியிலிருந்து மீட்டு புண்ணியத்தின் வசத்தில் சேர்க்கிறார்கள். மாண்ட மனுவாக இருந்த நம்மை மறுபிறப்பில் ஆக்கி மறலி வெருண்டு ஓடுகின்ற வான்குலத்தில் சிரஞ்ஜீவியாக வாழ வைக்கும் செயலே உயிர்த்தெழுதல். நித்தியராம் குரு பெருமானின் தயவால் னிஜத் தொழுகையைக் கற்றால் னித்தியமான பேரானந்தத்தில் திளைத்து வாழலாம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 22-03-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அடங்கலொ டுங்குமி டம்பட னின்றவ ரண்டமு தூறிடவும் ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**

வேதப் பதிக்குள் நுழைவதற்கான முதற் வாசற்படியே முத்தி முகப்பு. ஜீவ கலையின் சூட்சுமம் அறிந்து உணர்வெனும் கம்பத்தில் ஏறியே அவரவர் நாமத்திற்குரிய பொருளை தரிசிக்க முடியும். அழிவை நோக்கிய பயணமே புற உலக வாழ்வு என உணர்ந்து, நித்திய நன்மையை அளிக்கும் பரலோக பரமபத வாழ்வை மனிதன் அடைய வேண்டும் என்பதே காமீல்கள் நோக்கமாகும்.

*ஜீவ சகோதரர் கிரகதுரை :* மெய் ஆசான் தயவால் மறுபிறப்பு பெற்று தன் ஜீவனை தரிசித்த மக்களே ஜீவப் பிறவியர். கர்ம வினையின் தாக்கம் தீரும் தருணமே ஓர் மெய்க் குருபிரானின் சந்திப்பு நிகழும். யுகாந்த நாட்டுச் செல்வமாகிய அருள் வித்தானது நம் நினைவில் விதைக்கப் பெற்று முத்தி விருட்சமாகி மரணமிலாப் பெருவாழ்வில் குடியேற்றுகிறது.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவ சகோதரி அகிலாதேவி :* ஓரறிவாய் விளங்கும் தலைகீழ் மரத்தின் இரகசியமானது மனுவுக்குள் அடி முடி நடுவாக நின்றிலங்குகிறது. மனிதன் ஒரு தலைகீழ் மரம் என்பதின் ரகசியம் மனம் அறிவாகும் செயலுக்குள் தான் உள்ளது. வேதம் கூறும் கலிமா மரம், புட்ப கெந்தி மரம், கல்லால மரம், கற்பக விருட்சம் என அனேக நாமங்களில் அழைக்கப் பெறும் வட விருட்சத்தின் உற்பன ஸ்தானத்திற்கு குருவருளால் சென்றே குரு தட்சிணா மூர்த்தியை தரிசிக்க முடியும்.

*ஜீவ சகோதரி லதாதேவி :* அழியா சூக்கும தேகத்தை கைக்கொண்டு பிறவாமை பெறுவதற்கே இம்மானிட ஜென்மம் பெற்று வந்துள்ளோம். முப்பால் கடந்து மூல மலைக் குகையை அடைந்தால் சிவனெனும் வாடாத தீபத்தின் பிரகாசம் தோன்றும். குரு பிரான் தயவால் அஷ்டாங்க யோகம் பழகி வந்தால் முக்குணங்களில் வாழும் நாம் நிர்க்குணமாகி நித்திய வாழ்வு வாழலாம்.

*ஜீவ சகோதரி சருபா :* அனித்திய உடலல்ல நாம் என அறிந்து அனித்தியப் பொருளான மூச்சு முளைக்கும் இடமறிந்து அதை தேக்கும் செயலே பிராணாயாமம். ஒரு மெய் ஆசானிடம் செவி உணவு அருந்தி மனம் அறிவாக மாறி தூங்காமல் தூங்கும் செயல் பழகிவந்தால் வாழ்நாள் வீணாகாமல் மரணமில்லாப் பெருவாழ்வு வாழலாம். நாதம் விளைந்த நாதனின் நாதம் உட்கொண்டு நீதியெனும் பொருளை தரிசித்து சாவோலை கிழித்துப் பெறுவதே பேரின்பப் பெருவாழ்வு. இவை அனைத்தும் செயலாகும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவ சகோதரர் ரிஷி:* மனிதனிடம் ஆறாவது அறிவாக செயல்படும் மனதின் தன்மையை அறிவிப்பதே மெய்வழியின் அடிநாதமாகும். அமரருள் உயக்கும் அடக்கத்தின் மெய்ச் செயலும், பத்து அடையாளங்களின் அகமிய ரகசியமும் அறிவதற்கு மெய்க்குருபிரான் தயவு வேண்டும். மெய்யறிவு உதயம் உண்டாகிய பிறகே வேத வேதாந்தங்களின் உட்பொருளை உணர்ந்து உய்வடைய முடியும்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார்:* மனுவுக்குள் பத்து வயது கன்னியாக, இறை சூலியாக இலங்கும் அசல் தெய்வத்தை உணர்த்தும் நகல் அடையாளமே ஆதி சத்தி வாலைத்தாய் சன்னிதி. சரவண நந்தவனத்தில் அமைந்துள்ள இத் தெய்வீக திருச்சன்னிதியும், ஆதி மார்க்க னீதி அவையின் மின்னணு சஞ்சிகையும் உலக மக்களை மெய்ஞ்ஞானப் பாதையில் வழிநடத்தும் வரமாதி வரமாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 26-03-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **மெத்தவும் பயந்நே னையா…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது .

**காமீல்கள் நோக்கம் - குருபிரான் அருளமுதம் :**
திருவெனும் அட்சரத்துள் திரட்டி வைத்திருக்கும் தேவ ரகசியங்களை அறிய வைப்பரே அருட்குரு. சுவை, ஊறு, ஒளி, ஓசை, நாற்றம் எனும் பொறிகள் புலன் வழி பற்றி ஓடாமல் குருபிரான் அருளும் பிரம்ம வித்தையைப் பழகித் தேர்வதன் மூலம் புலனடக்கம் பெற்றால் அதுவே பஞ்சாட்சரமாகி நம்மை சிவனடி சேர்க்கும்.

**குரு ஸ்தோத்திரம் - குருபிரான் அருளமுதம் :**
பூர்வ புராதனமாகிய குடையிருட் கோளத்தை உணர்ந்தவரே பண்டை வேதியர். இறைவனால் சீதனமாக அருளப் பெற்ற அமானிதத்தை தன்னுள் உணர்ந்தால், சீதளமான



Copyright © AMNA Trust, Chennai 

எமனை மிதித்து ஏறும் வல்லபம் பெறலாம். ஆசான் தயவால் அறிவு இருக்கும் தலத்தில் குடியேறியதும், நம் குற்றங்கள் அனைத்தும் நீக்கப் பெற்று நித்திய வாழ்வு கைவரவாகிறது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண் : 14** உலகின் சர்வ படைப்புகளில் ஆறறிவு பெற்ற மனிதனே மகா உன்னதமானவன். தந்தையின் நினைவென்னும் அக்கினியில் உண்டான புழுக்கமானது வித்தாக மாறி, தாயின் அண்டமான கருமுட்டையினுடன் கலந்து சினையாகிறது. நால்வகை யோனி, எழுவகைத் தோற்றத்தை குரு அருளால் தன்னுள் அறியும் மனுவே தேவத்தன்மை பெறுகிறான்.

*ஜீவசகோதரர் சங்கர் :* குருபிரானின் னாதத்தை நம் செவியில் நுழைய விடாமல் தடுப்பது, மது செவிதனில் உள்ள விஷப் பாம்பாகும். னித்திய வாழ்வுக்காக குரு அருளும் உதவியே, நம் உயிருக்கு ஊதியம் அளிக்கும் பரோபகாரமாகும். மெய்ஞ்ஞான ஒருருளைத் தேவ ரதத்தினை ஓட்டிச் செல்வதற்கான துணைக் கருவிகளாக நாம் வாழ வேண்டும் என்பதே காமீல்கள் னோக்கமாகும்.
பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது .

## 28-03-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆறைந்தும் ஒருவருக்காய்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவ சகோதரர் கௌதம் :* உலக வாழ்வில் சகல சம்பத்தும் அசலாகப் பெற்று வாழ விரும்பும் நாம் இறை வழிபாட்டில் மாத்திரம் நகல் சடங்குகளே போதும் என வாழ்வதே மிகப் பெரிய அறியாமை. கொடிய மிடிமை இடராகிய சோம்பேறித்தனமே ஊழிப் பிறவி இருளில் நம்மை மூழ்கச் செய்கிறது. பிறவிப் பிணியை தீர்க்கும் வல்லமை கொண்ட குருபிரானை அடைந்து மூன்றாவது கண் திறக்கப் பெற்றால் நம் ஊழ் வினைகள் தீர்ந்து பிறவாமை எனும் பெரும் பேறு கிட்டும்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் : 232 - குருபிரான் அருளமுதம்:**
காருண்யப் பிரானின் துணையுடன் காலனைக் கண்ணால் எரிக்கும் கருத்தைப் பழகினால் எமனையும் சிவநேசனாக்கிக் கொள்ளலாம். சிவராஜ பாட்டையில் வழி கூடி நடப்பதற்கு மிகுந்த தோள் வலிமையும், ஆர்வ சித்தமும் வேண்டும் என வேதம் கூறுகிறது.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம் : ரோமன் அதிகாரம் 8 : 14**
வானம் திறப்பதையும் பரிசுத்த ஆவி இறங்குவதையும் காண்பீர்களாக எனும் சத்திய வசனத்தின் படி, ஆசானின் பரிசுத்த நினைவிலிருந்து பிறங்கும் அருளமுத வர்ஷிப்பே சுவிசேஷ நற்செய்தியாகும். கர்த்தரின் அருளால் எமனுடைய அதிகாரம் கடந்து வாழும் சுதந்திரம் பெற்றால், இவ்வுடலுள்ள போதே பேரின்பத்தை அனுபவிக்கலாம். தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற வேத வாக்கின் படி, தேவனுடைய ஊழியம் நித்தமும் நிகழ்கிறது.

**குருபிரான் அருளமுதம் :**
எழுவகைத் தோற்றத்தில் நரன், மனிதன், தேவனின் அடையாளம் அவரவர் நாவில் உள்ளது. அறிவும் அறியாமையும் வெளிப்படுவது பேசும் வார்த்தையின் மூலமே. தேவனிடத்தில் இருந்து பிறங்கும் திருவார்த்தையே மாயப் பிறப்பறுத்து மரணமிலாப் பெருவாழ்வு அளிக்கும் மந்திரமாகும். ஒன்பது வாயில் உட்தாளிட வைக்கும் அம்மந்திர ஓசையே அறுசுவை ஒளியும் இடத்தை அறிவித்து ஆருரில் சேர்க்கிறது. திருவெனும்



Copyright © AMNA Trust, Chennai

அட்சரத்துள் திரட்டி வைத்திருக்கும் ஜீவேசப்பொருளின் மெய்ச் செயலை எதார்த்த நன்மன மக்களிடம் சேர்ப்பதே பரோபகார புண்ணியச் செயலாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 29-03-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **பிறவிக் கோள் தீய்க்கு மெங்ஙள்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவ சகோதரர் மோகன் ராம் :* இறைவனை முன்பின் அறியாத மக்களே கோயில் குளங்கள் யாவும் தேடி அலைகின்றனர். **நின் செயலன்றி என் செயல் யாதுமில்லை** என வள்ளல் பிரான் அருளிய படி, இறைவனை அறிய வைக்கும் குருவினிடம் சரணாகதி அடையும் போதே எல்லாம் இறைவன் செயல் என உணர முடியும்.

*ஜீவ சகோதரி பிரேமா :* மூலமந்திரத்தை பிரகாச ரூபமாக நம்மிடம் தரிசிக்க வைப்பவரே மெய்க்குரு. சாகாக்கலை பழகித் தேர்வதன் மூலமே அடக்கத்தின் மெய்ச் செயலை உணர முடியும். சர்வ வேதங்களும் நம் ஜீவன் கடைத்தேறும் வழியையே கூறுகின்றன.

*ஜீவ சகோதரி லஷ்மி (பம்மல்) :* குருபிரானின் தவாக்கினியால் நம் மனதின் கள்ளம் கருகி உள்ளம் உருகி ஞான இச்சை உண்டாகிறது. ஆசானின் நாதமெனும் செவிச் செல்வத்தை உண்டால்தான் மனம் சைத்தான் என்ற நிலையில் இருந்து மாறி சுல்தானாகி இறை திருவடியில் நம்மை சேர்க்கிறது. இல்மு எனும் மெய்க்கல்வி குருவினிடம் கற்பதன் மூலம் ஜீவக்குழந்தையாகிய நாம் வனப்பேறி யௌவனம் அடைகிறோம்.

*ஜீவ சகோதரர் ராஜேந்திரன் (ஆவடி):* ஆசான் தயவால் மூன்றாவது கண் திறக்கப் பெற்ற பின்னரே, தெய்வத் திரு வாக்கியங்களின் உண்மை அர்த்தம் விளங்கும். வேத சாட்சிப் படி வாழ்வதே பிறவாமைக்கு வழி வகுக்கும். உயிர்ப் பயிரேற்றும் வல்லபமுடைய குரு நாதரின் பேரிரக்கமே நம்மை இறை நிலைக்கு உயர்த்தும்.

*ஜீவ சகோதரர் தயாளன்:* தவ சிரேஷ்டரின் பெருங் கருணையால் மெய்ப் பொருளை அறிந்த பின்தான், வாழ்வின் புது அத்தியாயம் பிறக்கிறது. ஆசான் நம் மீது வைக்கும் அன்பே நம்மை சிவமாக்கும். எதார்த்தம், ஒழுக்கம், வைராக்கியம் கொண்டே மெய்ப் பாதையில் பயணிக்கவும் தன்னை அறியவும் முடியும்.

*ஜீவ சகோதரி சரஸ்பதி சேகர்:* நித்தியராகிய குருபிரானின் தயவால் மூன்றாவது கண் திறக்கப் பெற்ற பின்னர் பெறுவதே ஜீவன் கண்ட ஜென்ம சாபல்யம். அறிவுக்கண் கொண்டு மெய்ப் பொருளைக் காண்பதே விஸ்வரூப தரிசனையாகும். மெய் ஞானத்தை பிறரிடம் கொண்டு சேர்க்கும் மேலான புண்ணிய காரியத்திற்கு மூலதனம் ஆசானின் ஆசீர் பாதமே.

*ஜீவ சகோதரர் சங்கர்:* இக பர சம்பத்துடன் வாழ அறிவுத் தெளிவு பெறுவது அவசியம். பெரியோர்கள் தங்கள் செந்தமிழ் நாவின் வலை வீசி ஞானப் பாதைக்கு ஈர்க்கும் மக்கள் யாவரும் வினை தீர்ந்தவர்களே.ஆதி பிதா கொண்டு வந்த அழியாத நித்திய ஐஸ்வர்ய செல்வமானது, இன்று ஆசானின் அருட் கொடையின் மூலம் ஆதி மார்க்க னீதி அவையின் மக்களுக்கு அருளப் பெறுகிறது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**08-03-2026 ~ ஞாயிற்றுக்கிழமை**

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வாழ்வனைத்தும் தந்நெனது குல முழுதும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. குருபிரான் வழிகாட்டுதலின் படி, ஞான அகவலில் **அருங்ஙோடை பாலைவனம் கானகத்தி லகப்பட்டு...** எனும் பாடல் விருத்தமாக மோஹனத்திலும், அதனைத் தொடர்ந்து **வாழ்வனைத்தும் தந்நெனது குல முழுதும்...** என்ற பாடல் விருத்தமாக கேதாரகௌளை ராகத்தில் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது

**குரு வா ஆழ்க! குருவே துணை!**



Copyright © AMNA Trust, Chennai


## 2026 - மார்ச் மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 01-03-2026 ~ ஞாயிற்றுக்கிழமை

சற்குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக சரவண நந்தவன வளாகத்தில் அமைந்துள்ள பரிசுத்த ஆவித் தெய்வத்தின் மெய் ஆலயத்தின் திறப்பு விழா சீர் சிறப்புடன் நடை பெற்றது.









Copyright © AMNA Trust, Chennai














Copyright © AMNA Trust, Chennai

**06-03-2026 ~ வெள்ளிக்கிழமை**

சற்குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக அவையின் அங்கத்தினர் **மஞ்சுளா - சேகர்** இவர்களின் மூத்த குமாரன் **S.சுபாஷ் - K.அக்க்ஷயா** இவர்களது திருமணம் சென்னையில் சிறப்புடன் நடைபெற்றது.



## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **01-05-2026 / திண்டிவனம் வெள்ளிக்கிழமை** | சற்குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக சரவண நந்தவனத்தில் அமைந்துள்ள பரிசுத்த ஆவித் தெய்வத்தின் மெய் ஆலயத்தில் சித்ரா பௌர்ணமி கொடியேற்றும் விழா நடை பெற உள்ளது. |
| **16-05-2026 / சிவகாசி சனிக்கிழமை** | சற்குருபிரான் சாலை ரவி அப்பா சிவகாசிக்கு எழுந்தருளி அருளமுத வர்ஷிப்பு வழங்க உள்ளார்கள். |
| **29-05-2026 / திண்டிவனம் வெள்ளிக்கிழமை** | சற்குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக ஜீவதம்பதியர் **வஜ்ஜிரவேல் - லட்சுமி** இவர்களின் புதல்வி **திருநிறைச்செல்வி கோமதி** மற்றும் ஜீவதம்பதியர் **இராமமூர்த்தி - தமிழ்ச்செல்வி** இவர்களின் புதல்வன் **திருநிறைச்செல்வன் தேவானந்த்** இவர்களது னீதித் திருமணம் திண்டிவனம் சரவண நந்தவனத்தில் அமைந்துள்ள பரிசுத்த ஆவித் தெய்வத்தின் மெய் ஆலயத்தில் நடை பெற உள்ளது. |



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2026 மார்ச் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 60**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 57 – Month: April 2026*